In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

O.S.No. 147/2018 | Deposition of Witness: PW2

Name: Senthilmurugan | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 04-06-2025.

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் பழனி ரோடு, கே.கே.நகரில் வசிக்கிறேன். நான் ஒர்க்சாப் வைத்து நடத்தி வருகிறேன். ராஜேந்திரன் என்பவர் பகவதி உஷா என்பவரிடம் 2015 ம் வருடம் ரூ.10 லட்சத்தை கடனாக வாங்கினார். பகவதி உஷா வீடு என் ஒர்க்சாப் அருகே உள்ளது. வாதி வீட்டில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது. அப்போது வாதியின் கணவர் அருணாச்சலம், ராஜேந்திரன், சாந்தி மற்றும் நான் இருந்தோம். புரோநோட்டை சாந்தி என்பவர் எழுதினார். சில்லறை கடன்களை அடைப்பதற்காக கடன் வாங்கினார். பணத்தை பெற்றுக்கொண்டு ராஜேந்திரன் புரோநோட்டில் கையெழுத்து போட்டுக்கொடுத்தார். அந்த புரோநோட்டில் சாட்சியாக நானும், புரோநோட்டை எழுதிய சாந்தியும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புரோநோட்டு அதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து வாதசாஆ.4.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.06.04 18:07:50 +0530

Principal District Judge,
Dindigul.